ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2475/08 - 2026 පෙබරවාරි මස 10 වැනි අඟහරුවාදා - 2026.02.10

2475/08 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பிலக்கம்.: KDS/HAR/4/2/1/58.
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும்
நீர்ப்பாசன அமைச்சின் குறிப்பிலக்கம்.: 4-3/18/2022/
WS/56.

கண்டி வடக்கு - பாததும்பர ஒன்றிணைந்த நீர் விநியோக திட்டத்தின் கீழான குழுகம்மன பம்ப் அறை நிர்மாணிப்பதற்கான மேலதிக காணித் துண்டொன் றினை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணி யிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் திருத்தச் சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

கண்டி மாவட்டத்தின் ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் பிரிவின், குழுகம்மன சியபத்து சிறு பிரிவின் இலக்கம் 447, குழுகம்மன கிராம அலுவலர் பிரிவின் குழுகம்மன கிராமத்தில் அமைந்துள்ள கண்டி மாவட்ட சிரேஷ்ட நில அளவையாளர் நாயகத்தினால் அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 320505 கொண்ட கடத்திரல் வரைபடத்தில் பிரிவு இலக்கம் 07 இல் பத்திர இலக்கம் 2 இல் இ.வி.லே. 1 இல் துண்டு இலக்கம் 1 எனக் காணப்படுகின்ற கீழ் விபரிக்கப் பட்டுள்ள காணித்துண்டின் விபரங்கள் பின்வருமாறு:

01. **துண்டு இல. 1 - காணியின் பெயர்: பன்சல்வத்த என்றழைக்கப்படும் பன்சல் அரம்ப, வலகடவத்த கும்புர, கஜுகஹகொடுவ, வலகடவத்த அரம்ப மற்றும் பிலிஞ்சகஹகொடுவ; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: குழுகம்மன விகாரை விகாராதிபதி வணக்கத்திற்குரிய எகிரியே சத்தானந்த ஹிமி மற்றும் கொழும்பு பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர்; விஸ்தீரணம்: 0.0072 ஹெக்டயார்**

வடக்கு: துண்டு இல. 2 மற்றும் பத்திரம் 1 இல் துண்டு இலக்கம் 1; கிழக்கு: பத்திரம் 1 இல் துண்டு இலக்கம் 1 மற்றும் 3; தெற்கு: பத்திரம் 1 இல் துண்டு

இலக்கம் 3 மற்றும் இவ்வரைபடத்தில் துண்டு இலக்கம் 2; மேற்கு: துண்டு இல. 2.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகார மளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும் மேலும், அக்காணி யில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மை யையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங் களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2026 ஆம் ஆண்டு மாச்சு 16 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மொஹான் தர்மதாஸ,
பிரதேச செயலாளர்,
ஹாரிஸ்பத்துவ.

பிரதேச செயலகம்,
ஹாரிஸ்பத்துவ,
நுகவெல,
2026, சனவரி 30.

EOG 02 - 0077

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 3/2/3/10/276.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/7/2019/
எச்டபிள்யூ/186.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 17.11.2021 ஆந் திகதிய 2254/27 ஆம் இலக்க அதிவிசேஷ வர்த்தமானி பக்கம் 15ஏ இல் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் நிட்டம்புவ - பஸ்யால வீதித் திட்டத்தின் கீழ் காணி எடுக்கப்படுகின்றது. கடத்திரல் வரைபட இல. 510607, வலய இல. 01, தாள் இல. 16 இல் துண்டு இலக்கங்கள் 513 மற்றும் 514 பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது என இத்தால் அறிவிக்கின்றேன்.

01. **துண்டு இல. 513**

காணியின் பெயர்: டெல்கஹவத்தை; விபரம்: தோட்டம், நிரந்தரக் கட்டிடத்தின் பகுதி, சீமெந்தால் கட்டப்பட்ட கிணறு மற்றும் மலசலகூடம் என்பன காணப்படுகின்றன; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: யூ. பீ. சி. ஜயநந்தன, இல. 47, கண்டி வீதி, நிட்டம்புவ. (காணி எடுத்தல் முடிவடைந்துள்ளது); விஸ்தீரணம்: 0.0313 ஹெக்ட யார்.

02. **துண்டு இல. 514**

காணியின் பெயர்: டெல்கஹவத்தை; விபரம்: தோட்டம், நிரந்தரக் கட்டிடத்தின் பகுதி காணப்படு கின்றது; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: யூ. பீ. சி. ஜயநந்தன, இல. 47, கண்டி வீதி, நிட்டம்புவ. (ஆரம்ப வரைபடத்தில் துண்டு இலக்கங்கள் பாவித்து முடிந்துள்ளது); விஸ்தீரணம்: 0.1855 ஹெக்ட யார்.

எஸ். பீ. குணவர்த்தன,
பிரதேச செயலாளர்,
அத்தனகலை.

பிரதேச செயலகம்,
அத்தனகலை.
2026, சனவரி 30.

EOG 02 - 0078

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழ் அறிவிப்பின் 3A பக்கத்தில் மற்றும் 2022.04.08 ஆந் திகதியன்று வெளியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 2274/28 இலும், 2022, செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதியன்று வெளியிடப்பட்ட தினமின, டெய்லி நியூஸ் மற்றும் தினகரன் செய்தித்தாள்களிலும் வெளியிடப்பட்ட அறிவிப்பின் படி 142 - கிரிமெட்டியாவ கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட தலங்கேதர கிராமத்தில் அமைந்துள்ள இறுதி கிராம வரைபட இலக்கம் 3691 இன் இணைப்பு இலக்கம் 02, தாள் இலக்கம் 02 இல் காட்டப்பட்டுள்ள 0.6943 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட "கொங்கஹமுலையாய" என அழைக்கப்

படும் காணித்துண்டு இலக்கம் 173, வரைபடத்தை பூர்த்தி செய்வதற்காக சேர்க்கப்பட்டிருந்த போதிலும், குறித்த காணி வடமேற்கு மாகாண பிரதான கால்வாய்க்காக கையகப்படுத்தப்படமாட்டாது என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேலும், மேற்குறித்த வர்த்தமானியின் 6A ஆம் பக்கத்திலும் செய்தித்தாள் அறிவிப்புகளிலும் குறிப் பிடப்பட்டுள்ளபடி 142 - கிரிமெட்டியாவ கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட கிரிமெட்டியாவ கிராமத் தில் அமைந்துள்ள கிராம வரைபட இலக்கம் 3683 இன் இணைப்பு இலக்கம் 25, தாள் இலக்கம் 25 இல் காட்டப்பட்டுள்ள 0.0476 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட "உணகஹயாய/ போகஹமுலஹேன" என அழைக்கப்படும் காணி துண்டு இலக்கம் 850, பிரிக்கப்பட்ட காணி பகுதியாக இருப்பதால் குறித்த காணி வடமேற்கு மாகாண பிரதான கால்வாய்க்காக கையகப்படுத்தப்படமாட்டாது என இதன் மூலம் மேலும் அறிவிக்கப்படுகிறது.

பி. எம். நதுன் ஆர். சம்பத்,
பிரதேச செயலாளர்,
மஹவ.

பிரதேச செயலகம்,
மஹவ.
2026, பெப்புருவரி 02.

EOG 02 - 0079